- 11 -

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL LABOUR COURT, COIMBATORE.

E.A.1/2019 in E.P.52/2018

DEPOSITION OF WITNESS	WITNESS NO. PW 1
NAME	Thiru.S. Venkateshan
FATHER NAME	Srinivasan
VILLAGE and Taluk	Coimbatore
CASTE and Calling	
RELIGION	Hindu
AGE	69
E.Mail I.D.	

Solemnly affirmed in accordance with provision of Act x of 1875.

DATED:21.03.2022

முதல் விசாரணை –

நான் M/s VSP Property Promoters நிறுவனத்தின் முதன்மை பங்குதாரர் ஆவேன். நான் எழுத்து பூர்வமான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதனை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ்கண்ட ஆவணங்களை நீதிமன்ற குறியீடு செய்து தக்க உத்தரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Ex.P.1	24.07.2009	மனுதாரரின் பதிவு சான்றிதழ் நகல்
Ex.P.2	05.03.2008	மனுதாரரின் கூட்டான்மை பத்திரம் நகல்
Ex.P.3	06.12.68	சூர்யகுமாரி பெயருக்கு ஏற்பட்ட கிரையப்பத்திரம் - சான்றிட்ட நகல் (ஆவண எண்.450/19869)
Ex.P.4	19.05.1969	சூர்யகுமாரி பெயருக்கு ஏற்பட்ட கிரையப்பத்திரம்- சான்றிட்ட நகல் (ஆவண எண்.2000/1969)
Ex.P.5	06.12.2068	சுஜாதா பெயருக்கு ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம்- சான்றிட்ட நகல் (ஆவண எண்.2406/1974)
Ex.P.6	11.03.1997	RSL Property Development நிறுவனத்திற்கு சூர்ய குமாரி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் - சான்றிட்ட நகல் (ஆவண எண்.692/1997)
Ex.P.7	12.03.1997	RSL Property Development Ltd நிறுவனத்திற்கு சூர்ய குமாரி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் - சான்றிட்ட நகல் (ஆவண எண்.730/1997)
Ex.P.8	13.03.1997	RSL Property Development Ltd நிறுவனத்திற்கு சூர்ய குமாரி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் - சான்றிட்ட நகல் (ஆவண எண்.757/1997)
Ex.P.9	03.03.1997	RSL Property Development Ltd நிறுவனத்திற்கு சூர்ய குமாரி

		எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் - சான்றிட்ட நகல் (ஆவண எண்.571/1997)
Ex.P.10	08.01.1997	RSL Property Development Ltd நிறுவனத்திற்கு சூர்ய குமாரி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் - சான்றிட்ட நகல் (ஆவண எண்.49/1997)
Ex.P.11	10.04.2008	மனுதாரர்களுக்கு RSL Property Development Ltd நிறுவனம் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் - சான்றிட்ட நகல் (ஆவண எண்.1733/2008)
Ex.P.12	14.11.2011	மனுதாரர்களுக்கு RSL Property Development Ltd நிறுவனம் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் - சான்றிட்ட நகல் (ஆவண எண்.2836/2013)
Ex.P.13	10.11.2011	மனுதாரர்களுக்கு RSL Property Development Ltd நிறுவனம் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் - சான்றிட்ட நகல் (ஆவண எண்.2342/2013
Ex.P.14	06.07.1998	தீர்ப்பு கடனாளிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் குறித்த தாசில்தார் வழக்கிய சான்றிதழ் நகல்
Ex.P.15		O.A.50/2013 ன் அலுவலக நகல்
		வில்லங்கச்சான்றிதள்

R1 தரப்பில் குறுக்கு விசாரணை:-

V.S.P Property Promoter நிறுவனம் ஒரு பங்குததாரர் நிறுவனம் என்றால் சரிதான். அதில் நான் ஒரு பங்குதாரர் ஆவேன். நான் எனக்காகவும் எனது நிறுவனத்தின் மற்ற பங்குதாரரர்களுக்காகவும் பொதுவில் சாட்சியமளிக்கிறேன். நான் அளிக்கும் சாட்சியும் அனைவரையும் கட்டுப்படுத்தும் என்றால் சரிதான். பட்டியல் ஆவணங்கள் மற்றும் வழக்கு விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். Ex.P.1 ன்படி 24.07.2009 ல் எங்களது பங்குதாரர் நிறுவனம் பதிக்கப்பட்டது என்றால் சரிதான்.

24.07.2009 ல் இருந்துதான் எங்கள் நிறுவனம் செயல்படத்தொடங்கியது என்றால் சரியல்ல. பங்குதாரர் ஆவணத்தின்படி முன்பே செயல்பட தொடங்கிவிட்டது. எங்கள் நிறுவனம் துவங்கப்பட்டபோது 6 பங்குதாரர்கள் இருந்தார்கள். 5 ம் பங்குதாரர் சித்ரா வெங்கடேசன் எனது மனைவியாவார். தற்போதும் அதே 6 பங்குதாரர்களுடன் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மனுவில் 2 பங்குதாரர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் பெண்கள் என்பதால் தவிர்த்துவிட்டோம். Ex.P.2 பங்கு

ஆவணத்தில் உள்ள 13 வது சரத்துப்படி எங்கள் நிறுவன செயல்பாடு முழுவதும் பங்குதாரர்களால் ஒருமனதாக தீர்மாணம் ஏற்பட்டு அதை minutes ல் பதியவேண்டும் என்றால் சரிதான். சரத்து எண்.5 ன் படி எங்கள் நிறுவனத்தின் மூலதனம் எல்லா பங்குதாரர்களையும் சேர்ந்து ரூ.18 லட்சம் என்றால் சரிதான். அந்த minutes புக்கை வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது வழக்கிற்கு தேவையில்லை. அந்த minutes புக் அறிவிப்பை பார்த்தால்தான் பங்கு நிறுவனத்தின் மொத்த செயல்பாடுகளை அறிய முடியும் என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட போது மேனேஜிங் பார்னர் ஆக பொறுப்புகளை பார்த்துவந்தேன். மற்றவர்கள் ஒர்க்கிங் பார்ட்னராக பொறுப்புகளை கவணித்து வந்தார்கள். தற்போதும் பங்கு நிறுவனத்தில் அதே நிலைதான் நிலவுகிறது. V.S.P பங்குதாரர் நிறுவனம் Real Estate செய்வதற்காக துவங்கப்பட்ட நிறுவனம் ஆகும். எனக்கு தமிழ் ஆங்கிலம் தெரியும். Ex.P.2 இரண்டாவது சரத்தின்படி நாங்கள் வேறு தொழிலும் செய்துகொள்ளலாம் என்றால் Real Estate தொடர்பான இதர தொழிலும் செய்துகொள்ளலாம் என்ற அர்த்தத்தில் உள்ளது. அவ்வாறு ஒரு தொழிலை செய்வதற்கு பங்குதாரர்கள் சரத்து 2 ன் படி ஏகமனதாக தீர்மானம் நிரைவேற்றி Minutes Entry போடுவோம் என்றால்வாய்பேச்சு மூலமாகவும் தொழில் செய்வோம். சரத்து எண்.6 ன்படி எங்கள் நிறுவனத்திற்கு Loan வாங்குவதாக இருந்தால் அது குறித்த ஆவணங்களில் எல்லா பங்கதாரர்களும் கையொப்பம் இட்டு ஒப்புதல் அளித்தால்தான் அந்த கடன் நிறுவன கடனாக கருதப்படும் என்று உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு Loan வாங்குவதாக இருந்தால் பங்குதாரர்கள் அனைவரும் தீர்மானம் நிறைவேற்றி Minuets புக்கில் பதிவு செய்வோம் என்றால் சரிதான். வாய்மொழியாகவும் முடிவெடுப்போம். எங்கள் மூலதனம் ரூ.18 லட்சம் அதிகமானதாக எனது மனுவிலோ பிரமான வாக்குமூலத்திலோ குறிப்பிடவீல்லை என்றால் சரிதான். அது அவசியப்படவில்லை. நாங்கள் கடன் வாங்கி மூலதனத்தை அதிகப்படுத்திய

வகைக்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்படின் தாக்கல் செய்கிறோம். ரூ.18 லட்சத்திற்கு மேல் முதலீடு செய்தோம் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறோம். எங்கள் நிறுவனத்திற்கு வங்கி கணக்கு ஆரம்பத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஒப்பணக்கார வீதி கிளையில் இருந்தது தற்போது கருர் வைஸ்யா வங்கி ஒப்பணக்காரவீதியில் உள்ளது. அவை இரண்டுமே நடப்பு கணக்கு ஆகும். அந்த கணக்குகளை Managing Partner என்ற முறையில் நான் மட்டுமே நிர்வகித்து வந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு கணக்கு ஆரம்பித்ததை minutes ல் Entry போட்டோமா என்றால் ஞாபகம் இல்லை. எனது இரு வங்கி கணக்குகளையும் எடுத்து பார்த்தால் எங்கள் நிறுவனத்தின் பணப்பரிவர்தனை விபரங்கள் தெரியவரும். மேற்படி வங்கி கணக்கு விபரங்களை வழக்கில் ஆஜர் படுத்தவில்லை என்றால் சரிதான். கம்பெனி ஆரம்பித்த 2008-2009 ம் ஆண்டிற்கு பின்னர் நாங்கள் நிறுவனத்தின் Balance Sheet பராமரிக்கவில்லை. எங்கள் நிறுவனத்திற்கான Balance Sheet தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் மூலதனத்தை கூட்டவோ அல்லது குறைக்கவோ சரத்து எண்.5 ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கூட்டவோ குறைக்கவோ செய்தால் அதை minuits Book ல் பதிவு செய்வோமா என்றால் ஞாபகம் இல்லை. எங்கள் முதலீடு எப்போதெல்லாம் கூட்டப்பட்டது அல்லது குறைக்கப்பட்டது என்பதை சத்தியப்பிரமாண வாக்குமுலதிலும் மனுவிலும் கூறவில்லை என்றால் சரிதான். அதற்கான சான்றாவணங்கள் எதையும் தாக்கல் செய்யவீல்லை என்றால் தேவைப்படவில்லை. எங்களது நிறுவனம் சார்பில் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யவில்லை. திருச்சி ரோட்டில் உள்ள ஆடிட்டர் வெங்கட்ராமன் தான் எங்களது ஆடிட்டர் ஆவார். சரத்து எண்.10ன் படி ஒவ்வொரு பங்குதாரும் மாத சம்பளமாக எவ்வளவு எடுத்துக்கொள்வோம் என்றால் ஞாபகம் இல்லை. எந்த காலம் வரை எடுத்துக்கொண்டோம் என்றால் அதுவும் ஞாபகம் இல்லை. வியாபாரமே

நடக்காததால் எங்களது டிவிடென்ட் எதுவும் கிடைக்கவில்லை. சரத்து எண்.12A ன்படி எங்கள் நிறுவனம் அதில் சொல்லப்பட்ட யாருடனும் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. 12B படி எங்கள் நிறுவனம் சார்பில் வேறு நிறுவனங்கள் எதனுடனும் முதலீடு செய்ய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. தனிநபருடனும் நாங்கள் முதலீடு எதுவும் செய்துகொள்ளவில்லை. P.2 பங்குதாரர் ஆவணம் தயாரித்த பின்னர்தான் P.1 பதவு சான்றின்படி பதிவு மேற்கொண்டோம். எவ்வளவு நாளில் பங்கு ஆவணத்தை பதிவு செய்ய வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியாது. P.2 பங்கு ஆவண சாட்சிகள் தற்போதும் இருக்கிறார்கள். அதன் இரண்டாவது சாட்சியம் ஆடிட்டர் ஆவார். இம்மனுவில் 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் பற்றி எனக்கு தெரியாது. அந்த நிறுவனத்தின் இயக்குனர்கள் மற்றும் நிர்வாக இயக்குனர்கள் போன்ற எந்த ஒரு தகவலும் தெரியாது. என் மனைவியைத் தவிர மற்ற பங்குதாரர்கள் யாரும் எனக்கு ரத்த பந்தம் இல்லை. Ex.P.3 ல் கண்டுள்ள 5.6.1961 கிரையப்பத்திரமும அதன் மூல ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். S.F.No.266 க்கு உட்பட்ட புஞ்சை நிலத்தின் சரிபாதி எனது இடம். சரிபாதி இடத்தை Ex.P.3 எம்.கிருஷ்ணசாமி 6.12.1968 ல் சூரியகுமாரிக்கு எழுதிக்கொடுத்தார். அதன் ஆவண எண்.450/1969 என்றால் சரிதான். S.F.No.266 க்கு எத்தனை உட்பிரிவுகள் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது உட்பிரிவு எண்.266/1 ஆகும். ஒவ்வொரு உட்பிரிவுக்கும் எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது எனக்கு தெரியாது. Ex.P.4 ல் பக்கம் 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள 1958 ம் பதிவு செய்யப்பட்ட 6 ஆவணங்களையும் அதற்குரிய மூல ஆவணங்களையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Ex.P.4 ன் படி S.F.No.298 ல் 5 ஏக்கர் 43 செண்ட் என்று பதிவாகியுள்ளது. Ex.P.4 ஆவணம் 19.05.1969 ல் இந்திரா சூரியகுமாரி எழுதிக்கொடுத்த ஆவணமாகும். Ex.P.4 ஆவணம் எண்.2000/1969. S.F.No.298 எத்தனை உட்பிரிவுகள் உள்ளது என்ற விபரம்

ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான் எனக்கும் தெரியாது. Ex.P.3 சொத்தில் உள்ள விபரத்தில் 1.75 பரப்பளவுள்ள தென்புறமான இடம் பாப்பசாமிநாயிடுவுக்கு சொந்தமானது என்று சொல்லப்பட்டுள்ளது. Ex.P.5 பக்கம் 2 ல் 20.11.1963 ம் தேதியே செட்டில் மெண்ட் ஆவணம் மற்றும் மூல ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. Ex.P.5 பக்கம் 2 ல் சூரியகுமார் / சூரியகுமாரி அவரது 6 வயது மைனர் மகள் சுஜாதா என்ற லட்சுமிநாயகிக்கு பி.எம்.பாப்புசாமி நாயிடு எழுதிவைத்தது. சுஜாதா என்று அழைக்கப்படுகின்ற லட்சுமி ரங்க நாயகிக்கு Legal Gardian L.Balakrishnan Naidu Ex.P.5 மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்ததால் அவர்கள் பெற்றோர் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்பதுக்கு ஆவணங்கள் பார்க்கவில்லை. அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்சொன்ன பாப்புசாமிநாயிடு , மற்றும் P.M.பாப்புசாமி நாயிடு வெவ்வேறு நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. லட்சுமி நாயகிக்கு பாட்டனார் பாலகிருஷ்ணன் நாயிடு என்ற உறவு முறைகள் பற்றி எனக்கு தெரியாது. P.5 ல் கண்ட P.M.Pappusami Naidu ன் சினேகிதர் பெயர் இல்லை அவர் யார் என்று எனக்கு தெரியாது. சுஜாதா லட்சுமி ரங்க நாயகி பாப்புசாமி நாயிடுவின் பேத்தி என்று கண்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. Legal gardian Balakrishnan Naidu நிலையில் பத்திரம் எழுதிக்கொடுத்ததால் சூரிய குமாரி Ex.P.6 ஐ உயிருடன் இருந்து ஏற்படுத்தி கொடுத்திருக்க வாய்பில்லை என்றால் சரியல்ல. Ex.P.6 ல் சூரிய குமாரியின் வயது 45 என்று உள்ளது என்றால் சரிதான். 11.03.1997 ல் பத்திரம் எழுதப்பட்டது. Ex.P.4 ல் சூரியகுமாரி மைனராகத்தான் இருந்திருக்கவேண்டும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. Ex.P.6 ன்படி வாங்கிய நபர் பெயர் அவரது முகவரி R.S.L. Property Develepment நிறுவனம் டாக்டர் அழகப்பா ரோடு சென்னை -22 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. Ex.P.15 மனுவில் கண்ட இரண்டாம் மனுதாரரின் முகவரியும் அதே முகவரியும் ஒன்று தான் என்றால்

சரிதான். எனவே இரண்டும் ஒரே நிறுவனம் என்று சொன்னால் சரியல்ல. இரண்டு நிறுவனத்திற்கும் ஒரே **board of director** என்றால் சரியல்ல. **Ex**.,**P**.6 ஆவணத்தின்படி முத்துக்கருப்பன் கம்பெனிக்காக சொத்து வாங்கியுள்ளார். **Board of Dirctors** தீர்மானம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். **RSL Propedrty Develepment** நிறுவனத்தின் அப்போதைய மேலாண்மை இயக்குனர் **Board of Dirctors** யார் என்பது அப்போது எனக்கு தெரியாது. சூரியகுமாரி உயிருடன் இல்லை என்று தெரியவருகிறது என்றும் எனவே அவர் **Ex**.**P**.7 சூரிய குமாரி எழுதிக்கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. **Ex**.**P**.7 ல் கண்டுள்ளபடி **Board of Directors** போட்ட தீர்மாணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது வழக்கிற்கு தேவையில்லை. **Ex**.**P**.7 ல் சூரியகுமாரிக்கு கையிருப்பு சொத்து இருப்பதாக காட்டப்பட்டுள்ளது. **Ex**.**P**.8 தீர்ப்பில் கண்டுள்ள முகவரியும் **Ex**.**P**.15 ல் கண்டுள்ள **RSL Property** முகவரி ஒரே முகவரி என்றால் சரிதான். அந்த சொத்தை வாங்க போடப்பட்ட **Board of Director** போட்ட தீர்மாணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். **Ex**.**P**.9 ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கும் **Board of Director** போட்ட தீர்மாணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். **Ex**.**P**.10 ஆவணம் சுஜாதா **RSL Property Develepment** நிறுவனத்திற்கு எழுதிக்கொடுத்தார். **Ex**.**P**.10 பக்கம் 3 ல் கண்டுள்ள ஒவ்வொரு உட்பிரிவுக்கும் உண்டான விஸ்தீரணம் சரியானதுதான். **Ex**.**P**.9 மற்றும் **Ex**.**P**.10 கண்டுள்ளபடி மொத்த விஸ்தீரணம் 2.68 ஏக்கர் என்று சொன்னால் எங்கள் ஆவணத்தில் கண்டுள்ளபடி 2.37 ஏக்கர்தான் சரியாளது. **Ex**.**P**.11 ல் கிரையத்தொகை ரூ.6430000/- என்று உள்ளது. 10.04.2008 ம் தேதி ஆவண எண்.1733/2008 என்றால் சரிதான். இதில் சொத்து 2.43 ஏக்கர் ஆகும். அதில் கண்டுள்ள **RSL Property** நிறுவனத்தின் முகவரி சரியானதுதான். **Ex**.**P**. 11 ன் பக்கம் 12 மற்றும் 13 ல் மொத்தம் 9 ஆவணங்களை கிரையதாரர் எனக்கு கொடுத்ததாக உள்ளது. 5.3.2008 **Board of directer** தீர்மாணம் போட்டதாக உள்ளது.

அந்த தீர்மாணத்தை தாக்கல் செய்யவில்லை. 2009 ல் கம்பெனி செயல்பாட்டிற்கு வந்துள்ள நிலையில் 2008 ல் கண்டுள்ளபடி **Ex.P**.11 தீர்மாணம் போட்டது போல் கிரையம் முடிந்துள்ளதால் மேற்படி கிரையம் போலி கிரையம் ஆகும் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கிரையம் முடிக்கும்போது வாங்கிய மூலப்பத்திரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால்வ தேவைப்பட்டதை மட்டும் தாக்கல் செய்துள்ளோம். **Ex.P**.11 ல் கண்டுள்ளபடி சூரியகுமாரிக்கு கையிருப்பு நிலம் 2 ஏக்கர் நிலம் **RSL Property Development** பத்திரப்பதிவின்போது இருந்தது. **Ex.P**.11 ல் பக்கம் 8 ல் கண்டுள்ளபடி 2 தவனைகளாக பணம் கொடுத்தது உண்மைதான். 2 வது தவனை பணம் **RSL Property Development Ltd** க்கு கொடுத்ததாக இல்லை என்றால் **Ltd** தவறுதலாக விடுபட்டுள்ளது. **Ex.P**12 **S.F.No**.266/1 ல் 2.37 ஏக்கர் மட்டுமே கிரையம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். அதில் கிரையத்தொகை ரூ.60 லட்சம் ஆகும். அதில் **Power Agent Rajendran** கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார். **Ex.P**12 பக்கம் 11 ல் 5 வது ஆவணம் **Power of Attorny** என்று சொல்லப்பட்டுள்ள பவர் பத்திரத்தை இவ்வழக்கில் ஆஜர் படுத்தவில்லை என்றால் சரிதான். அதில் தரப்பட்டுள்ள 5 மூலப்பத்திரங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எல்லா மூலப்பத்திரங்களையும் தாக்கல் செய்துள்ளேன். **Ex,P**.12 20.07.2011 தேதியிட்ட தீர்மானத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள் என்றால் நாங்கள் வழக்கில் ஆஜர் செய்யவில்லை. **Rajendran Power** பத்திரம் 26.07.2011 ல் எழுதப்பட்டது. 4 வது ஆவணம் **Articles of Association** வழக்கில் ஆஜர் செய்யவில்லை. **Ex,P**.12 பக்கம் 7 ல் கிரையத்தொகை 30 லட்சத்தை 16.10.2008 ல் **RSL Property Development** க்கு கொடுத்ததாக உள்ளது. 2 வது தவனைதொகை 30 லட்சத்தை 14.11.2008 ல் கொடுத்ததாக உள்ளது. 2011 ல் தீர்மாணம் போட்ட பின்னர் **Power** பத்திரம் எழுதியிருக்க வாய்ப்பில்லை என்றும் 2008 ல் இரு தவனைகளாக ரூ.60 லட்சம் தந்திருக்க வாய்ப்பில்லை என்றும் மேற்சொன்ன கிரையப்பத்திரம் மோசடியாக

தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. Ex,P.13 பக்கம் 8 ல் நான்கு ஆவணங்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரி அதில் 2,3,4 ஆகிய ஆவணங்கள் வழக்கில் தேவையில்லை என்பதால் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. Ex,P.13 பக்கம் 5 கிரையத்தொகை ரூ.45 லட்சத்தை 12.09.2008 ல் குடுத்ததாக உள்ளது. தீர்மாணத்தின்படிதான் சொத்தை விற்க முடியும் என்றும் முன்பே பணத்தை கொடுத்துவிட்டதாக சொல்வது மோசடி கிரையம் என காட்டுகிறது என்றால் சரியல்ல. S.F.No.298 6.7.31998 ம் தேதியில் Ex.P.14 சொல்லப்பட்டுள்ள S,.F.No.266/1 S,.F.No.298/1 ஆகிய காளைகளில் உள்ள சொத்திற்கு சொந்தகாரர்கள் இருந்தும் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. Ex.P.15 மனுவில் நான் தரப்பினர் இல்லை. எனவே Ex.P.15 ஆவணத்தில் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அவ்வழக்கின் தீர்ப்பு என்னவாயிற்று என்றால் எனக்கு தெரியாது. Ex.P.15 பக்கம் 39 Schedule B கண்டுள்ள சொத்துக்கும் Ex.P.14 owner ship சொத்திற்கும் முரண்பாடுள்ளது என்றால் சில முரண்பாடுகள் உள்ளன. சில உட்பிரிவுகள் விடுபட்டுள்ளன. BMS தொழிற்சங்கத்தை சேர்ந்த தொழிலாளர்கள் காளை 298 காலை 266/1 ல் கண்டுள்ள சொத்துக்களை நிறைவேற்று மனுவில் சம்பள பாக்கிக்காக ஜப்தி செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் தான் இந்த வழக்கை நடத்தினேன். இதே நீதிமன்றம் மேற்படி சொத்துக்களை பற்றுகை செய்தது என்றால் சரிதான். தொழிலாளர்களின் பின்பாக்கி தொகைகளை நான் கொடுத்துவிட்டதால் மேற்படி வழக்கு வாபஸ் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது என்றால் எண்களை சொன்னால்தான் சொல்ல முடியும். நாங்கள் சொத்தை வாங்கியபோது ESI நிறுவனம் அதை பற்றுகை செய்திருந்தது என்றால் சரியல்ல. நாங்கள் சொத்தை வாங்கும்போது பற்றுகை ஏதும் இல்லை. மேற்படி பற்றுகை இருந்தும் நான் வில்லங்க சொத்தை வாங்கிக்கொண்டு வேண்டுமென்றே மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

வில்லங்கபத்திரத்தின்படி அது 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பணம் செலுத்தித்தான் ESI பற்றுகையை விடுவித்தோம் என்று சொன்னால் சரியல்ல,. ESI பற்றுகை காரணமாக எங்களது கிரைய ஆவணம் முடக்கப்பட்டது என்றால் சரியல்ல. இரண்டு வருடம் கழித்துதான் ESI பற்றுகைக்கான பணத்தை செலுத்தியபின்னர் தான் கிரைய ஆவணத்தை விடுவித்தார்கள் என்றால் சரியல்ல. 1.4.2013 ல் தொழிலாளர் சம்பள பாக்கிக்காக இதே நீதிமன்றம் சொத்தை ஜப்தி செய்தது என்றால் சரியல்ல. 23.05.2013 , 24.6.2013 ஆகிய தேதிகளில் ESI க்கான பாக்கி பணத்தை கட்டிய பின்னர்தான் விடுவித்தார்கள் என்றும் அதற்கு முன்பு தொழிலாளர் சம்பள பாக்கி காரணமாக தமிழக அரசு அதே சொத்தை ஜப்தி செய்தது என்றால் சரியல்ல. நான் வில்லங்கம் போட்டு பார்த்த பின்னர்தான் மேற்படி விபரங்களை அறிந்துகொண்டேன். அதன் பின்னர் சுமார் இரண்டு ஆண்டுகள் கழித்துதான் பற்றுக்களை நீக்ககோரி நீதிமன்றத்தில் தாமதமாக மனுதாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி தொழிலாளர் சம்பள பாக்கி தொகை ரூ.13 லட்சத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யசொல்லி உத்தரவிட்டது என்றால் அது பற்றி தெரியாது. மீண்டும் 2005 ல் மேற்சொன்ன பணத்தை 2, 3 எதிர்மனுதாரர்கள் உடனடியாக தொழிலாளர்களுக்கு சம்பள பாக்கியாக செலுத்த வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது என்றால் அது பற்றி தெரியாது. 25.06.2007 ல் தமிழக பஞ்சாலை தொழிலாளர் சங்கம் சார்பில் சொத்து நீதிமன்ற பற்றில் இருப்பதாக சொல்லி யாரும் அதை வாங்க கூடாது என்று சொல்லி கோவை மாலை மலர் விளம்பரம் போடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சட்டவிரோதமாக ESI பாக்கி மட்டும் செலுத்தி விட்டு தொழிலாளர் சம்பள பாக்கியை வேண்டுமென்றே செலுத்தாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. ESI பற்றுகையை பணம் கொடுத்து நீக்கியதாக ESI ல் கடிதம் உள்ளது என்றால் சரியல்ல. சொத்து வாங்கும்போது

மேற்படி பற்றுகை பற்றி தெரியுமா என்றால் வில்லங்கச்சான்றில் வராததால் எனக்கு தெரியாது. ESI. EPF. Commercial TAX பிரச்சனைகளையும் நான் நீதிமன்றத்திலும் மனுவிலும் தாக்கல் செய்யவில்லை. 1 வது அட்டவனை சொத்தை எழுதிக்கொடுத்த ராமசாமிதான் 3 ம் எதிர்மனுதாரரின் மேலான்மை இயக்குனர் என்றால் சரியல்ல. Sale Paper ல் இணைக்கப்பட்ட வில்லங்ச்சான்றுபடி பட்டியல் எண். 6 மற்றும் 8 ன்படி 3 வது எதிர்மனுதாரர் தான் சொத்தின் உரிமையாளர் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3 வது எதிர்மனுதாரர் தனது நிலைபாட்டை எடுத்துரைத்து மனுவில் கட்சி சேர தவறியுள்ளார் என்றால் சரிதான். நான் சொத்தின் உரிமையாளர் என்பதை நிரூபிக்க தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. சூரியகுமாரி, மற்றும் சுஜாதாவின் மூலப்பத்திரங்களை பார்க்காமல் நான் சொத்தின் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. எனது கிரையதாரர் ராமசாமி உரிமையினை நான் எடுத்துரைக்க தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. நாங்கள் கிரையப்பத்திரத்தின் படி பட்டா சிட்டா அடங்கல் பெயர் மாற்றம் செய்யவில்லை சரிதான். பற்றுகை இருந்ததால் செய்யவில்லை. RSL Property Develepment ஐ பார்டியாக கட்சி சேர்க்க வில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது கோரிக்கைகளை நிரூபிக்கவில்லை என்றால் சரியல்ல. எனவே தொழிலாளர் சம்பள பாக்கிக்காக பற்றுகை செய்யப்பட்டது சட்டப்படி சரியானது என்றால் சரியல்ல. எங்கள் கிரைய பத்திரத்தில் கண்டுள்ள கிரைய தொகை கைமாரவில்லை என்றும் நான் நல்லென்ன கிரையதாரர் இல்லை என்றால் சரியல்ல. RSL தொடர்புடைய கிரையப்பத்திரங்கள் அனைத்தும் தொழிலாளர் உரிமையை மறுப்பதற்காக உறுவாக்கப்பட்ட மளரனை கிரையமாகும் என்றால் சரியல்ல. நான் 2,3 எதிர்மனுதாரர்களுடன் மோசடியாக கூட்டு சேர்ந்து கொண்டு பொய் கோரிகைகை வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே இதே நீதிமன்றம் அட்டேச் மெண்ட் தள்ளுபடி செய்துள்ளதால் இந்தமனுவும் தள்ளுபடி

செய்யத்தக்கது என்றால் சரியல்ல, நான் பொய் சாட்சியம் அளிக்கிரேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.